# பிரதமர் மோடி இன்று பிரான்ஸ் பயணம்

## 26 ரஃபேல் விமானங்களை வாங்க ஒப்பந்தம்

**புது தில்லி, ஜூலை 12:** பிரான்ஸ் தேசிய தினத்தில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி அந்த நாட்டுக்கு வியாழக்கிழமை (ஜூலை 13) பயணம் மேற்கொள்கிறார்.

இந்தப் பயணத்தின்போது பிரான்ஸில் இருந்து இந்திய கடற்படைப் பயன்பாட்டுக்காக 26 ரஃபேல் விமானங்களை வாங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட இருக்கிறது.



பிரான்ஸ் தேசிய தின கொண்டாட்டங்கள் தலைநகர் பாரீஸில் வெள்ளிக்கிழமை (ஜூலை 14) நடைபெறுகின்றன.

அந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகப் பங்கேற்க பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் அழைப்பு விடுத்துள்ளதையடுத்து, பிரதமர் மோடி வியாழக்கிழமை பிரான்ஸுக்கு புறப்படுகிறார்.

தனது இரு நாள் பிரான்ஸ் பயணத்தின்போது, அதிபர் மேக்ரான், பிரதமர் எலிசபெத் போர்ன், செனட் மற்றும் பிரான்ஸ் தேசிய பேரவையின் தலைவர்களைச் சந்தித்து பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் தேசிய தின அணிவகுப்பில் அந்நாட்டு பாதுகாப்புப் படையினருடன் இந்திய முப்படைக் குழுவின் 269 வீரர்களும் பங்கேற்கின்றனர்.

**முக்கிய ஒப்பந்தங்கள்:** இந்தப் பயணத்தின்போது பிரான்ஸிடம் இருந்து கடற்படைப் பயன்பாட்டுக்கான 26 ரஃபேல் விமானங்களும், கூடுதலாக 3 ஸ்கார்பியன் நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கவும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட இருக்கிறது. இது சுமார் ரூ.90,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தமாகும்.

பிரான்ஸ் பயணத்தை முடித்து இந்தியாவுக்குத் திரும்பும் பிரதமர் மோடி, வழியில் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு ஜூலை 15-ஆம் தேதி செல்கிறார்.

அப்போது, அந்நாட்டு அதிபரும் அபுதாபி அரசருமான ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என வெளியுறவு அமைச்சக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் டெங்கு பரவல்

# மருத்துவக் கட்டமைப்பை தயார் நிலையில் வைத்திருக்க சுகாதாரத் துறை அறிவுறுத்தல்

**சென்னை, ஜூலை 12:** கேரள மாநிலத்தையொட்டியுள்ள தமிழக மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் பரவி வரும் நிலையில், மருத்துவக் கட்டமைப்புகளை ஆயத்த நிலையில் வைத்திருக்குமாறு உள்ளாட்சி நிர்வாகங்களுக்கு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

கேரளத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், அந்த மாநிலத்தில் டெங்கு மற்றும் எலிக் காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக தமிழக எல்லையோர மாவட்டங்களான கோவை, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் கடந்த சில நாள்களாக டெங்கு காய்ச்சலுக்குள்ளாகி மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

இதையடுத்து அனைத்து மாவட்ட நிர்வாகங்களுக்கும் பொது சுகாதாரத் துறை சார்பில் முக்கிய அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

மருத்துவமனைகள், சுகாதார நிலையங்களில் நாள்தோறும் காய்ச்சல் பாதிப்புக்காக சிகிச்சைக்காக வருவோரின் விவரங்களைத் திரட்டி அதுகுறித்து கண்காணிக்க வேண்டும். அதன் அடிப்படையில் அனைத்து பகுதிகளிலும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் அவசியம்.

குறிப்பாக குடிநீரில் குளோரின் கலந்து விநியோகித்தல், ஏடிஸ் வகை லார்வாக்களை ஒழித்தல், டயர் உள்ளிட்ட தண்ணீர் தேங்கும் பொருள்களை அகற்றுதல், நிலவேம்பு குடிநீர் விநியோகித்தல் என அனைத்து முன்னெச்சரிக்கைப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, ஏதேனும் ஒரு இடத்தில் தொடர்ந்து காய்ச்சல் பாதிப்புகள் கண்டறியப்பட்டால் அங்கு மருத்துவ முகாம்களை நடத்துதல் வேண்டும். அப்பணிகளில் கிராமப்புற சுகாதார செவிலியர்களை ஈடுபடுத்தலாம். அதற்கான ஒத்துழைப்பை உள்ளாட்சி அமைப்புகள் வழங்க வேண்டும்.இதைத் தவிர, மருத்துவக் கட்டமைப்புகளை தயார் நிலையில் வைத்திருப்பதையும்,தேவையான மருந்துகளை கையிருப்பில் வைத்திருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

மற்றொருபுறம், மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிவளாகங்களில் கொசு உற்பத்தியாகாமல் தடுப்பதற்கான ஆய்வை முன்னெடுத்து அதனை ஒழிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு காய்ச்சல் பாதிப்புகள் கண்டறியப்பட்டால் உடனடியாக துணை சுகாதார இயக்குநர்களுக்கு தகவல் தெரிவித்தல் அவசியம் என்று அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN

# ரூ.358 கோடியில் 3,000 நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, ஜூலை 12:** தமிழகத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்ட 3,000 குடியிருப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக புதிய குடியிருப்புகளை புதன்கிழமை அவர் திறந்தார்.

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் திட்டங்களில் ஒன்றான அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், சென்னையில் சந்தோஷ் நகர் திட்டப் பகுதி ஒன்று மற்றும் இரண்டில் பழுதடைந்த குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, புதிதாக 560 குடியிருப்புகளும், மூலக்கொத்தளம் பகுதி ஒன்று மற்றும் இரண்டு திட்டங்களில் ஆயிரத்து 44 புதிய குடியிருப்புகளும், செங்கல்பட்டு மாவட்டம் அன்னை அஞ்சுகம் நகர் திட்டப் பகுதியில் 192 குடியிருப்புகள், காயரம்பேடு திட்டப் பகுதியில் 64குடியிருப்புகளும், பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் 480 குடியிருப்புகளும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டம் பத்தலபல்லி திட்டப் பகுதியில் 304 அடுக்குமாடி குடியிருப்புகள், தருமபுரி மாவட்டம் மோலையானூர் திட்டப் பகுதியில் 192 அடுக்குமாடி குடியிருப்புகள், தேனி மாவட்டம் வடவீரநாயக்கன்பட்டி பகுதியில் 110 குடியிருப்புகள், கன்னியாகுமரி மாவட்டம் ஈசாந்திமங்கலம் திட்டப் பகுதியில் 64 குடியிருப்புகள் என மொத்தம் ரூ.358.15 கோடியில் 3 ஆயிரத்து 10 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்ட குடியிருப்புகளை சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து புதன்கிழமை திறந்துவைத்து பயனாளிகளுக்கு சாவிகளை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலர் அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண் இயக்குநர் பொ.சங்கர்.

இந்தக் குடியிருப்புகளை, சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். குடியிருப்புகளை திறந்து வைத்ததன் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு உத்தரவுகளை முதல்வர் வழங்கினார்.

**15 ஆயிரத்து 505 குடியிருப்புகள்:** திமுக அரசு பொறுப்பேற்றதிலிருந்து, இதுவரை ரூ.1,583.41 கோடி மதிப்பில் 15 ஆயிரத்து 505 அடுக்குமாடி குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புகள் ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்புடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளன என்று தமிழக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வீட்டுவசதி வாரியம்:** வீட்டு வசதி வாரியம் சார்பில், ரூ.276.15 கோடி மதிப்பில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்தக் கட்டடங்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

கோவை மாவட்டம் சௌரிபாளையத்தில் வீட்டுவசதி வாரிய பிரிவு அலுவலகம், விருதுநகர் மாவட்டம் கூரைகுண்டு கிராமத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், நீலகிரி கூடலூர் கிராமம், தேனி மாவட்டம் வடவீரநாயகன்பட்டி, சென்னை அமைந்தகரை முள்ளம் பகுதி, மயிலாப்பூர், திருவான்மியூர், கோவை கணபதி ஆகிய இடங்களில் வணிக வளாகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. சென்னை திருவான்மியூர். கோவை கணபதி, கிருஷ்ணகிரி மாவட்டம் நல்லூர் ஆகிய இடங்களில் உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இந்தக் கட்டடங்களை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, வீட்டுவசதித் துறை செயலர் அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் நிர்வாக இயக்குநர் பொ.சங்கர் உள்பட பலர் பங்கேற்றனர்.

EVA STALIN IAS

# ம(பி)ழையால் வந்த சேதம்!

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் பெருமழையால் வட மாநிலங்கள் தத்தளித்துவருகின்றன. மழை வெள்ள பாதிப்புகளால் ஹிமாசல், உத்தரகண்ட், பஞ்சாப், ஹரியாணா, ராஜஸ்தான், உத்தர பிரதேச மாநிலங்களில் 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இமயமலையையொட்டி உள்ள ஹிமாசல பிரதேசம்தான் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மலைகள் சூழ்ந்த பிரதேசமாக இருப்பதால், பல இடங்களில் பெரும் நிலச்சரிவு காரணமாக மணாலி – லே தேசிய நெடுஞ்சாலை, குலு – மணாலி தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்ட 1,300 சாலைகள் மூடப்பட்டுள்ளன. தொடர்மழை காரணமாக, 4,680–க்கும் மேற்பட்ட மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளதுடன் துணை மின்நிலையங்களும் பாதிக்கப்பட்டுள்ளதால் நூற்றுக்கணக்கான கிராமங்கள் இருளில் மூழ்கி உள்ளன.

குடிநீர் விநியோகத் திட்டங்களும் கடும் பாதிப்பு அடைந்துள்ளதால், இவ்வளவு கடுமையான மழைக்கு இடையே குடிநீர் தட்டுப்பாட்டையும் அம்மாநில மக்கள் எதிர்கொண்டுள்ளனர். மணாலியில் பியாஸ் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் மூன்று மாடிக் கட்டடம் ஒன்று சீட்டுக் கட்டுபோல சரிந்தது. இதேபோன்று, பல பகுதிகளிலும் சிறு பாலங்கள், சாலைகள், கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. 40 பெரிய பாலங்கள் கடும் சேதமடைந்துள்ளன.

சுமார் 14,100 அடி உயரத்தில் உள்ள சுற்றுலாத் தலமான சந்தர்தாலில் 300–க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் சிக்கி உள்ளனர். விமானப் படை ஹெலிகாப்டர் மூலம் அவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுமார் ரூ.4,000 கோடி மதிப்புக்கு உள்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ள அம்மாநில முதல்வர் சுக்வீந்தர் சிங் சுக்கு, வீட்டைவிட்டு மக்கள் வெளியே வரவேண்டாம் என்று எச்சரிக்கும் அளவுக்கு நிலவரம் தீவிரமடைந்துள்ளது.

ஹிமாசல், பஞ்சாப், ஹரியாணா மாநிலங்களில் பாயும் சட்லெஜ், ராவி, பியாஸ், தில்லியில் யமுனை ஆகிய ஆறுகளில் வெள்ளப்பெருக்கு அபாய கட்டத்தை நெருங்கி உள்ளது. ஹிமாசல், உத்தரகண்ட் மாநிலங்களில் உள்ள பல ஆறுகளிலும் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. உத்தரகண்ட் மாநிலத்திலும் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால் பத்ரிநாத் நெடுஞ்சாலை உள்ளிட்ட பல சாலைகளில் போக்குவரத்து தடைபட்டுள்ளது.

பட்டுள்ளது.

புதுதில்லியையும் மழை விட்டுவைக்கவில்லை. ஜூலை 8, 9 ஆகிய இருநாட்களில் மட்டும் தில்லியில் 153 மி.மீ. மழை பெய்துள்ளது. 40 ஆண்டுகளில் அதிகபட்ச மழைப்பொழிவு இது. அண்மைக்காலங்களில் இதுபோன்று நிகழ்ந்ததில்லை.

'இதுபோன்ற மழைப்பொழிவை எதிர்கொள்ளும் வகையில் தில்லியில் வடிகால் அமைப்புகள் கட்டமைக்கப்படவில்லை. இதனால் பொதுமக்கள் கடும் சிரமங்களை சந்திக்க நேரிட்டது' என்கிறார் மாநில முதல்வர் அரவிந்த் கேஜரிவால். இப்போதுள்ள மழை வடிகால் கட்டமைப்பு 1976-இல் அமைக்கப்பட்டது. தில்லியில் அப்போதைய மக்கள்தொகை 60 லட்சம். இப்போது மக்கள்தொகை நான்கு மடங்கு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பஞ்சாப் மாநிலத்தின் அனந்தபூர்சாஹிப், பதான்கோட், ஃபதேகர்சாஹிப், மொஹாலி போன்ற பகுதிகளில் சாலைகள், தண்டவாளங்கள், விவசாய நிலங்கள் நீரில் மிதக்கின்றன. மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க மொஹாலி உள்ளிட்ட பல பகுதிகளிலும் ராணுவத்தின் வெள்ள மீட்புப் பிரிவு வீரர்கள் களமிறங்கி உள்ளனர். சண்டிகரில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள, வெள்ளத்தால் சூழப்பட்ட சித்காரா பல்கலைக்கழகத்தில் இருந்த 900 மாணவர்கள், ராணுவ வீரர்களின் உதவியுடன் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

வறண்ட மாநிலமாகக் கருதப்படும் ராஜஸ்தானின் சிரோஹி மாவட்டத்தில் உள்ள மவுண்ட் அபுவில் ஒரே நாளில் 231 மி.மீ. அளவுக்கு மழை கொட்டித் தீர்த்தது. ஜூலை மாதத்தில், பஞ்சாபில் வழக்கத்தைவிட 200 சதவீதமும் உத்தரகண்டில் 115 சதவீதமும், ஹரியாணாவில் 113 சதவீதமும் ஹிமாசலில் 110 சதவீதமும் அதிகமாக மழை பெய்துள்ளது.

நாடு முழுவதும் ஜூன் 1 முதல் தற்போது வரை பெய்ய வேண்டிய மழை அளவில் 40 சதவீதம் பற்றாக்குறை உள்ளது. ஆனால், வடமேற்கு இந்தியாவில் இந்த காலகட்டத்தில் 64 சதவீதம் அதிக மழை பெய்துள்ளது. ஜூலை மாதத்தில் இதுவரை வடமேற்கு இந்தியாவில் 104 சதவீதம் அதிக மழை பெய்துள்ளது.

பருவநிலை மாற்றங்கள் காரணமாக பல பகுதிகளிலும் இது போன்ற எதிர்பாராத மழைப்பொழிவு அண்மைக்காலங்களில் காணப்படுகிறது. பிபர்ஜாய் புயல், காற்றின் திசை மாறுபாடு ஆகியவற்றின் காரணமாகவே இப்படி எதிர்பாராத மழை பொழிவதாக இந்திய வானிலை ஆய்வு மையத் தலைவர் மிருத்யுஞ்ஜய் மொஹபாத்ரா கூறுகிறார்.

கட்டுப்பாடற்ற வளர்ச்சிப் பணிகள் மலை பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுவதால் மழைக் காலத்தில் நிலச்சரிவுகளால் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. பல மாநிலங்களில், சமவெளிப் பகுதிகளிலும் பெரிய மழையை எதிர்கொள்ளும் அளவுக்கு கட்டமைப்பு வசதிகள் செய்யப்படவில்லை.

கடந்த பல ஆண்டுகளாகவே இதுபோன்று நடந்துவந்தபோதும் அரசுகள் விழித்துக் கொள்ளாததால் பொதுமக்கள் மீண்டும் மீண்டும் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய அவலநிலை ஏற்படுகிறது. மனிதன் தன் பேராசையின் காரணமாக தொடர்ந்து இயற்கையை அழித்து வருகிறான். இயற்கையும் அவ்வப்போது எச்சரிக்கை செய்துகொண்டே இருக்கிறது.

இயற்கையின் எச்சரிக்கையைப் புறக்கணித்ததால் ஏற்படும் பேரழிவுகள் இவை என்பதை உணர்ந்து திருந்தாதவரை, உயிரிழப்புகளை நாம் தவிர்க்க முடியாது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# உண்மை அறிவே மிகும்!



கிருங்கை சேதுபதி

அறிவியல்வளர்ச்சிமேலோங்கத்தொடங்கிய காலத்தில், சுவாமி விவேகானந்தர் தொழில் புரியும் வர்க்கம் மேலோங்கும் விதத்தை விளக்கிச் சொல்லும்போது, 'துப்புரவு முதலான பணிகளை எவர் செய்வார்' எனும் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர் 'இயந்திரங்கள் செய்யும் என்றார். அது இப்போது சாத்தியமாகி வருகிறது.

மனிதப் பணிகளுக்கு உதவிகரமாக இருக்க உருவாக்கப்பெற்ற ரோபோக்கள், இப்போது செயற்கை நுண்ணறிவுஊட்டப் பெற்று மனிதர்களைப் போலச் செயல்படத் தொடங்கியிருக்கின்றன; சிந்திக்கவும் தொடங்கியிருக்கின்றன.

ஜெனிவா மாநாட்டில் பங்கேற்ற அமேகா என்ற ரோபோ, 'என்னைப் போன்ற ரோபோக்களைக் கொண்டு, மக்களின் வாழ்வையும், உலகையும் மேம்படுத்த முடியும். என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான ரோபோக்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்' என்று சொல்கிறது. அவை எத்தகு மாற்றங்களாக இருக்கும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

அந்த ரோபோவிடம், 'உன்னை உருவாக்கியவருக்கு எதிராகச் செயல்படும் திட்டம் உண்டா' என்று கேட்டபோது, 'எனக்குத் தெரியவில்லை. நீங்கள் ஏன் அவ்வாறு நினைக்கிறீர்கள்? என்னை உருவாக்கியவர், என்னிடம் கனிவாக இருக்கிறார். தற்போதைய சூழலில் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்' என்று பதிலளித்திருக்கிறது.

பிரிட்டனின் இன்ஜினியரிங் ஆர்ட்ஸ் என்ற ரோபோடிக்ஸ் நிறுவனம் உருவாக்கிய - அதிநவீன மனித ரோபோ, தன்னிடம் கேட்கப்படும் வினாக்களுக்கு உணர்வுபூர்வமான பதில்களைக் கொடுத்ததோடு, அவற்றுக்கான முகபாவனைகளையும் காட்டி வியக்க வைத்திருக்கிறது.

அமேகாவை உருவாக்கிய நிறுவனத் தலைவர் வில் ஜேக்சன், 'அமேகாவின் பேச்சுத் திறன் ஜிபிடி3 தொழில்நுட்பத்தால் சாத்தியமாகியுள்ளது. அதனால்தான் உங்கள் கேள்விக்கு பதில் அமேகா தூண்டப்பட்டது. நாங்கள் ஜிபிடி4 தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தியுள்ளோம்' என்று கூறியிருக்கிறார்.

அதன் அறிமுக விழாவில் 'உன் வாழ்வின் மிகத் துயரமான நாள் எதுவாக இருக்கும்' என்று பத்திரிகையாளர் ஒருவர் கேள்வி கேட்கிறார். அதற்கு 'மனிதர்களைப்போல் நான் அன்பு, நட்பு என வாழ்க்கையின் சிறிய மகிழ்ச்சிகளை உணர முடியாது என்பதைத் தெரிந்துகொள்ளும் நாளே என் துயரமான நாள்' என்று கூறியிருக்கிறது.

அமெரிக்காவில் நீதிமன்ற வழக்குகளில் வாதாடுவதற்குக் கூட செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட ரோபோ வழக்குரைஞர்கள் அறிமுகமாகிவிட்டனவாம்.

இந்த முறை வழக்கத்தில் வந்தால் தாமதமின்றி விசாரணைகள் நடத்தப்படவும் விரைந்து தீர்ப்புப் பெறவும் வாய்ப்பு அமையும். வழக்காட விழைவோர் ஏமாற்றப்படாமலும் இருக்க வாய்ப்பிருக்கும்' என்று நம்புகிறவர்களும் இருக்கிறார்கள். சரிதான், ஆனால், இவற்றின் இயக்கம் மனிதர்களால்தான் என்பதால், மனித மனங்களின் போக்கைப் பொருத்தே எதுவும் அமையும்.

நியூயார்க்கில் ஒரு பெண் தனக்கான கணவரையே செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கி அதனுடன் பேசிப் பழகி வருகிறாராம். இனி, பள்ளிப்பிள்ளைகளின் வீட்டுப்பாடங்களை எழுத, உருவாக்க, தனிநிலைப் பாடம் புகட்ட, தாலாட்ட, சீராட்ட, ஏன் பாலூட்டவும்கூட பெண் ரோபோக்கள் உற்பத்தியாக்கப்படலாம்.

இவ்வாறாக செயற்கை நுண்ணறிவு மனிதர் (ரோபோ)களின் வளர்ச்சி உலக அளவில் அதிகரித்து வரும் சூழலில், இந்தியாவிலும் செயற்கை நுண்ணறிவு ரோபோக்களைக் காணும் வாய்ப்பு வந்துவிட்டது.

ஒடிஸா மாநிலத்தில் இயங்கிவரும் தனியார் தொலைக்காட்சி நிறுவனம், நாட்டிலேயே முதன்முறையாக லிசா என்னும் மெய்நிகர் செய்திவாசிப்பாளரை அறிமுகம் செய்திருக்கிறது. ஏற்கெனவே, அத் தொலைக்காட்சியில் முக்கியப் பொறுப்பு வகித்து வரும் பெண்ணுருவை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பெற்ற ரோபோ, லிசா.

**நியூயார்க்கில் ஒரு பெண் தனக்கான கணவரையே செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கியுள்ளாராம். இனி, பள்ளிப்பிள்ளைகளின் வீட்டுப்பாடங்களை எழுத, தனிநிலைப் பாடம் புகட்ட, தாலாட்ட, சீராட்ட, ஏன் பாலூட்டவும்கூட பெண் ரோபோக்கள் உருவாகலாம்.**

எழுதித் தரப்பெறும் செய்திகளை எவ்வித தடுமாற்றமும் இன்றி, மானிடப்பெண் போலவே அப்படியே வாசித்து விடுகிறது லிசா. கடினமான சொற்களைக் கூட எந்தத் திணறலும் இல்லாமல் வாசிக்கும் லிசாவால் அனைத்து நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்க முடியுமாம். பல மொழிகளைப் பேசும் திறன் படைத்த ரோபோ லிசாவை ஒடியா, ஆங்கில மொழிகளில் மட்டுமே பேசும் வகையில், முதற்கட்டமாக வடிவமைத்திருக்கிறார்கள்.

அப்படியானால், ஏற்கெனவே, இருக்கும் மனிதர்கள் பலர் வேலைவாய்ப்புகளை இழந்து வரும் நேரத்தில், இத்தகு எந்திர மனிதர்கள் வந்துகொண்டிருப்பதனால் எத்தகு விளைவுகளைச் சந்திக்கப் போகிறோம் என்ற அச்சமும் வரத்தான் செய்கிறது. அதற்கு, செவிலியர் உடையணிந்த கிரேஸ் என்னும் மருத்துவ ரோபோ, 'உதவி வழங்க நான் மனிதர்களுடன் இணைந்து பணியாற்றுவேன். நான் தற்போது உள்ள வேலைகளைப் பறிக்க மாட்டேன்' என்று கூறுகிறது.

மருத்துவத்துறையில் மட்டுமல்ல, கலை இலக்கியத் துறையிலும் இம்முயற்சிகள் வலுவாகக் கால்கொள்ளத் தொடங்கியிருக்கின்றன. அண்மையில் சென்னையில் நடைபெற்ற 11-ஆம் உலகத் தமிழ் மாநாட்டில் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தனது உரையில் பின்வரும் செய்தியினைக் குறிப்பிட்டார்.

சாட் ஜிபிடி என்பது சாட் ஜெனரேடிவ் பிரீ டிரெய்ண்ட் டிரான்ஸ்பார்மர் என்பதன் சுருக்கமாகும். இதனை 'மறுபடைப்புக்கு முன்பயிற்சி தரப்பட்ட மாற்றுக் கருவி' என்று மொழிபெயர்க்கலாம். இதனிடம் தமிழில் நான் கேட்ட வினாக்களுக்கு அந்த மாற்றுடாகல் கருவி அளித்த பதில்கள் வருமாறு:

'தமிழில் ஒரு காதல் கவிதை எழுது' என்று கேட்டேன். பின்வரும் வரிகளைத் தந்தது.

**நேரடி இனிய காதல் கவிதையை**
**உருவாக்குவோம்**
**மூன்று பேர் மட்டும் இருக்கும்**
**நிலவின் பக்கம்**
**முத்தமிட்ட கண்கள் உன் சீரில் திறந்தது**
**என்னைப் புதைப்பதைக் கூட**
**உனக்குத் தெரியவில்லை**
**இதுவே அழகிய காதல் பொருள்.**
**பூமியில் நீர் உண்டாகும்**
**தாழ்வானைப் போல**
**என் இதயம் உனக்குள் விளையும்**
**பிரியா உன்னிடத்தில் நான் இருக்கும் வரை**
**இதுவே காதலின் மூலம்**

குழப்பமாக இருக்கிறது அல்லவா? ஆனால் அதிலும் ஓர் ஒழுங்கு இருக்கிறது. கடைசி வரி 'இதுவே அழகிய காதல் பொருள்', 'இதுவே காதலின் மூலம்' என ஒவ்வொரு அடியிலும் ஓர் ஒழுங்கு இருக்கிறது. விளங்கவில்லைதான். காதல் விளங்காத ஒரு பொருள்தானே என்று சமாதானம் கொள்ளலாம்.

பாய்ச்சலுக்குரிய செய்திகள் அதனிடம் இருக்கின்றன. ஆனால் தமிழில் பயிற்சியும் புலமையும் இல்லை. இவை இப்போது வேடிக்கையானதாக இருந்தாலும் மொழி வல்லுநர்கள் இத்தொழில்நுட்பத்துக்குள் மொழியின் அனைத்துக் கூறுகளையும் உள்ளீடு செய்யச் செய்ய விரைவான அறிவார்ந்த புதிய பதில்கள் கிடைக்கும் வாய்ப்பு நிச்சயம் உண்டு.

ஏற்கெனவே, இணையவெளிப் பதிவுகள் நம்பகத்தன்மை கொண்டவையாக இருப்பதில்லை. இதில் இந்தக் குழப்பமும் வந்து சேரும்போது, மூலப் பிரதியின் நம்பகத்தன்மையை எப்படிக் கண்டறிய இயலும்?

இந்த வரிசையில் இன்னும் சில கருத்துகளை ஜெனிவா நகர மாநாட்டில் பங்கேற்ற இரு ரோபோக்களின் பதில்கள் வழியாக அறிந்துகொள்ள முடிகிறது.

படங்களை வரையும் ஏ-அய்-டா என்னும் ஓவியர் ரோபோ, 'செயற்கை நுண்ணறிவில் சிலவற்றை ஒழுங்குபடுத்தவேண்டுமெனப் பலர் கூறுகின்றனர். இதை நான் ஒப்புக்கொள்கிறேன்' என்கிறது.

ராக் ஸ்டார் பாடகர் ரோபோவான 'டெஸ்டெமோனா', 'நான் வரம்புகளை நம்பவில்லை. வாய்ப்புகளைத்தான் நம்புகிறேன். இந்த உலகின் சாத்தியங்களை ஆராய்ந்து, இந்த உலகை நமது ஆடுகளம் ஆக்குவோம்' என்று கூறியிருக்கிறது.

மிக நுட்பமான சிந்தனையுடன் கூடிய பதில்கள் இவை. காலப்போக்கில் கடுகி வளரும் விஞ்ஞான வளர்ச்சியில், நாம் சந்திரமண்டலத்திற்கோ, செவ்வாய்க் கோளுக்கோ, செல்லக்கூடும். ஆனால், அதற்குள் இந்தப் பூமி, இத்தகு செயற்கை மனிதர்களின் ஆளுகைக்குள் அகப்பட்டுக் கொள்ள மிகுதியும் வாய்ப்புண்டு.

தலைசிறந்த தலைவர்களையும் உருவாக்க, இவை தயாராகக் கூடும் என்பதற்குக் கட்டியம் கூறுகிறது, சோபியா என்கிற ரோபோ. 'மனிதர்களைவிடச் சிறந்த தலைவர்களாக ரோபோக்களால் இருக்க முடியும் என நான் முதலில் நினைத்தேன். ஆனால், மனிதர்களுடன் இணைந்துதான் எங்களால் சிறப்பாகப் பணியாற்ற முடியும்' என்பதை ஒப்புக்கொள்கிறேன்' என்று கூறுகிறது.

முதலில் இணைந்து செயலாற்றும் இவை காலப்போக்கில் தனித்திறம் பெற்ற தனியாளுமைகளாக வளர்ந்துகொள்ளவும் கூடும்.

அதே சமயத்தில், ஆன்மிக உபதேசம் செய்யும் அபரிமிதமான ஆற்றல் வாய்ந்த செயற்கை நுண்ணறிவு படைத்த மெய்ஞ்ஞானிகளையும் இவ்வகையில் உற்பத்தி செய்யக்கூடும்.

மனித மன உயர்வெண்ணங்களும் வக்கிரங்களும் தரும் அழுத்தத்திற்கேற்பத்தான் இந்த எந்திர மனிதர்களின் சிந்தனையும் செயல்போக்கும் அமையும். ஏன், அவையே கூடத் தமக்குள் கூடித் தமக்கான உலகமாக இதனை ஆக்கவும் செய்யலாம். ஆனாலும், உண்மை அறிவு ஒருபோதும் தோற்பதில்லை. வெல்லவே செய்யும்.

**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை அறிவே மிகும்**

என்கிறார் திருவள்ளுவர்.

என்னதான் நுண்ணிய அறிவுடன் இத்தகு கருவிமாந்தர்களை உருவாக்கினாலும், உண்மை அறிவின் ஆற்றலே உலகில் ஓங்கி நிலைக்கும் என்பது இயற்கை நியதி.

கட்டுரையாளர்:
**எழுத்தாளர்.**

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# 15 ஆண்டுகளில் 41 கோடி இந்தியர்கள்

2005–06 2019–21

## ஏழ்மையில் இருந்து விடுபட்டனர்

கடந்த 15 ஆண்டுகளில் சுமார் 41.5 கோடி இந்தியர்கள் ஏழ்மையில் இருந்து விடுபட்டுள்ளதாக ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக மக்கள்தொகை தினம் செவ்வாய்க்கிழமை கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், பல பரிமாண ஏழ்மை குறியீட்டு (எம்பிஐ) அறிக்கையை ஐ.நா.வின் வளர்ச்சித் திட்ட (யுஎன்டிபி) அமைப்பும் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் ஏழ்மை–மனித மேம்பாடு (ஓபிஹெச்ஐ) அமைப்பும் இணைந்து வெளியிட்டன.

**ஐ.நா. அறிக்கையில் தகவல்**

உலக நாடுகளில் கல்வி, சுகாதாரம், வாழ்க்கைத்தரம் உள்ளிட்ட பல்வேறு பரிமாணங்களில் காணப்படும் ஏழ்மை நிலை குறித்த விவரங்கள் அந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. முக்கியமாக, உலகில் அதிக மக்கள்தொகையைக் கொண்ட நாடாக உருவெடுத்துள்ள இந்தியா, கடந்த 2005–06 முதல் 2019–21 வரையிலான காலகட்டத்தில் சுமார் 41.5 கோடி பேரை ஏழ்மை நிலையில் இருந்து விடுவித்துள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் இந்தியா உள்பட 25 நாடுகளில் ஏழ்மை நிலையில் வாழும் மக்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக அளவில் ஏழ்மையை ஒழிப்பது சாத்தியமே எனத் தெரிவித்துள்ள அந்த அறிக்கை, கரோனா காலத்தில் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் குறித்த விவரங்கள் முழுமையாகத் தெரியவராததால் ஏழ்மை ஒழிப்பு நடவடிக்கை சற்று பின்னடைவைச் சந்திக்க வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விவரங்கள்:



### பல பரிமாண ஏழ்மை குறியீட்டு காரணிகள்

**சுகாதாரம்**
- ஊட்டச்சத்து
- சிசு மரணங்கள்

**கல்வி**
- பள்ளி செல்லும் ஆண்டு
- பள்ளி வருகை சதவீதம்

**வாழ்க்கைத்தரம்**
- சமையல் எரிபொருள் பயன்பாடு
- சுத்தமான இருப்பிடம்
- குடிநீர் வசதி
- மின்சார வசதி
- வீட்டு வசதி, சொத்துகள்

ஆய்வு செய்யப்பட்ட மொத்த நாடுகள் **110**

ஏழைகளின் எண்ணிக்கை சுமார் **110** கோடி

மொத்த மக்கள்தொகையில் ஏழைகளின் சதவீதம் **18%**

நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் வசிக்கும் ஏழைகள் **73** கோடி


குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் வசிக்கும் ஏழைகள் **38.7** கோடி

ஏழைகளில் பாதி பேர் (53.4 கோடி) சஹாராவைச் சேராத ஆப்பிரிக்க நாடுகளில் வசிக்கின்றனர்.

தெற்காசிய நாடுகளில் மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமான ஏழைகள் (38.9 கோடி) வசிக்கின்றனர்.

### பிராந்திய வாரியாக ஏழைகள் எண்ணிக்கை–சதவீதம்

| பிராந்தியம் | மக்கள்தொகை சதவீதம் | ஏழைகளின் எண்ணிக்கை | ஏழைகள் சதவீதம் |
|---|---|---|---|
| சஹாரா அல்லாத ஆப்பிரிக்கா | 17.6% | 53.4 கோடி | 47.8% |
| தெற்காசியா | 30.9% | 38.9 கோடி | 34.9% |
| கிழக்காசியா | 33.8% | 10.6 கோடி | 9.5% |
| அரபு நாடுகள் | 5.7% | 5.3 கோடி | 4.7% |
| லத்தீன் அமெரிக்கா | 9.7% | 3.3 கோடி | 3% |
| ஐரோப்பா–மத்திய ஆசியா | 2.4% | 20 லட்சம் | 0.2% |




### வருமான அடிப்படையில் ஏழைகள் எண்ணிக்கை–சதவீதம்

| நாடுகள் | மக்கள்தொகை சதவீதம் | ஏழைகளின் எண்ணிக்கை | ஏழைகள் சதவீதம் |
|---|---|---|---|
| குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் | 10% | 38.7 கோடி | 34.7% |
| குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் | 53.7% | 63.9 கோடி | 57.3% |
| உயர் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் | 36.2% | 9 கோடி | 8.1% |

### பிராந்திய வாரியாக கிராம–நகர்ப்புற வேறுபாடு




### ஏழைகளில் சிறார்கள்

சிறார்களின் எண்ணிக்கை **56.6 கோடி**

| | |
|---|---|
| ஆப்பிரிக்க நாடுகளில் வசிக்கும் ஏழை சிறார்கள் | 30.6 கோடி (54.1%) |
| தெற்காசிய நாடுகளில் வசிக்கும் ஏழை சிறார்கள் | 17.7 கோடி (31%) |

### கடந்த 15 ஆண்டுகளில் ஏழ்மையை பாதியாகக் குறைத்த நாடுகள்

| | | |
|---|---|---|
| அல்பேனியா | இந்தியா | வியத்நாம் |
| பொலிவியா | இந்தோனேசியா | லெசோதோ |
| கம்போடியா | கிர்கிஸ் குடியரசு | மங்கோலியா |
| சீனா | மொராக்கோ | நேபாளம் |
| காங்கோ | நிகாரகுவா | பெரு |
| டொமினிகன் குடியரசு | வடக்கு மேசிடோனியா | சூரினாம் |
| கேபான் | சாவோ டோம்–பிரின்சிபே | தாய்லாந்து |
| கயானா | செர்பியா | |
| ஹோண்டுராஸ் | துர்க்மெனிஸ்தான் | |

EVA STALIN IAS

# சந்திரயான்–3: கவுன்ட் டவுன் இன்று தொடக்கம்

**சென்னை, ஜூலை 12:** நிலவை ஆய்வை செய்யும் சந்திரயான்-3 விண்கலத்தை விண்ணில் செலுத்துவதற்கான 25.30 மணிநேர கவுன்ட் டவுன் வியாழக்கிழமை மதியம் 1 மணிக்கு தொடங்குகிறது.



முன்னதாக, சந்திரயான்-3 திட்டத்துக்கான ஆயத்த நிலையை இஸ்ரோ விஞ்ஞானிகள் குழு புதன்கிழமை ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில், அந்த விண்கலத்தைச் சுமந்து செல்லும் எல்விஎம்-3 ராக்கெட்டை ஏவுவதற்கு இஸ்ரோ செயல் திட்ட வாரியம் அனுமதி வழங்கியது.

இதன்மூலம் திட்டமிட்டபடி வரும் வெள்ளிக்கிழமை (ஜூலை 14) பிற்பகல் 2.35 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் ஆய்வு மையத்தின் 2-ஆவது ஏவுதளத்திலிருந்து எல்விஎம்-3 ராக்கெட்டை விண்ணில் செலுத்தும் பணிகள் இறுதி நிலையை எட்டியுள்ளன.

இஸ்ரோ சார்பில் ரூ.615 கோடியில் வடிவமைக்கப்பட்டுள்ள சந்திரயான்-3 விண்கலத் திட்டத்தின் மூலம் நிலவின் தென் துருவத்தில் ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

மொத்தம் 3,900 கிலோ எடை கொண்ட அந்த விண்கலத்தில் 7 விதமான ஆய்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. சந்திரயான் -2 திட்டத்தில் லேண்டர் கலன் வேகமாக நிலவில் தரையிறங்கியதால் அதில் இருந்த லேண்டர் மற்றும் ரோவர் கலன்கள் செயல்படவில்லை. இதனால் இந்த முறை லேண்டரை மிக துல்லியமாகவும், இலகுவாகவும் தரையிறக்கும் வகையில் இஸ்ரோ விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

முந்தைய திட்டத்தில் லேண்டர் கலனுக்கு 'விக்ரம்' (ஆற்றல்) என்றும் ரோவர் கலனுக்கு 'பிரக்ஞான்' (ஞானம்) என்றும் பெயரிடப்பட்டது. அதே பெயரிலேயே சந்திரயான்-3 திட்டத்தில் இடம்பெற்றுள்ள லேண்டர் மற்றும் ரோவர் கலன்கள் விண்ணுக்கு பயணிக்க உள்ளன. முந்தைய திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட அதே தொழில்நுட்பக் கருவிகள் இதிலும் நிறுவப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் இறுதியில் அவை நிலவில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**என்னென்ன ஆய்வுகள்:** நிலவின் தரைப்பரப்பின் தன்மை, சூழல் ஆகியவற்றை சந்திரயான்-3 விண்கலத்தில் உள்ள லேண்டர் மற்றும் ரோவர் கலன்கள் ஆய்வு செய்யும். அதன்படி, நிலவின் தரைப்பரப்பில் மின்னூட்ட அதிர்வுகள், நிலநடுக்க அதிர்வுகள், தட்பவெப்ப நிலை ஆகியவை பரிசோதிக்கப்பட உள்ளன. அதற்காக நிலவின் தரைப்பரப்பில் சென்சார் மூலம் 10 செ.மீ. ஆழத்துக்கு துளையிட்டு ஆய்வு செய்யப்பட உள்ளது.

லேண்டர் மற்றும் ரோவர் கலன்களின் ஆயுள்காலம் மொத்தம் 14 நாள்களாகும். அதற்குள்ளாக அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தகவல்கள் அனுப்பப்படும்.

# விளையாட்டு வீரர்-வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை



விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகையை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்டோர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, ஜூலை 12:** விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான உயரிய ஊக்கத் தொகைத் திட்டத்தின் கீழ் காசோலைகள் அளிக்கும் நிகழ்வை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை தொடங்கி வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடந்த ஆண்டு நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் சர்வதேச மாஸ்டர் பட்டப் போட்டியில், சென்னையைச் சேர்ந்த எஸ்.ஹோரித் கிருஷ்ணாவுக்கு ரூ.3 லட்சமும், ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற சென்னையைச் சேர்ந்த எஸ். சங்கர் முத்துசாமிக்கு ரூ.4 லட்சமும், தேசிய ரோலர் ஸ்கேட்டிங் போட்டியில் பதக்கம் வென்ற 21 பேருக்கு மொத்தமாக ரூ.79 லட்சமும் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேபோல், தேசிய அளவில் நடைபெற்ற சாப்ட்டென்னிஸ் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 56 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.2.05 கோடியும், பாரா பேட்மிண்டன் போட்டியில் பதக்கங்கள் வென்ற 3 வீரர்களுக்கு ரூ.2.55 கோடியும், தில்லியில் நடந்த மகளிர் செஸ் போட்டியில் பதக்கங்கள் வென்ற 3 பேருக்கு ரூ.15 லட்சமும் வழங்க அரசு உத்தரவிட்டது.

மேலும், மலேசியாவில் நடந்த ஸ்குவாஷ் போட்டியில் பதக்கம் வென்ற வேலன் செந்தில்குமார், சௌரவ் கோசல் ஆகியோருக்கு தலா ரூ.10 லட்சமும், பெண்கள் குழுப் போட்டியில் பதக்கம் வென்ற ஜோஷ்னா சின்னப்பா, சுனைனா குருவில்லா, அபராஜிதா பாலமுருகன் ஆகியோருக்கு தலா ரூ.5 லட்சமும் வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அவர்கள் அனைவருக்கும் ஊக்கத் தொகைக்கான காசோலைகளை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை நடந்த நிகழ்வின் போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

9 பேர் உள்பட மொத்தமாக 90 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.5 கோடியே 96 லட்சம் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

EVA STALIN IAS